DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF PROCEDURE)
IN THE COURT OF DISTRICT MUNSIF, VANIYAMBADI, THIRUPATTUR DISTRICT

| | |
|---|---|
| Name | இனயதுல்லா |
| Father's Name | பாஷாகான் |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1872 on the day of **02.12.2025**

**E.P,. No. 02/2025 in OS.No.115/2022 ம.சா.2 3.00 PM To 3.11 PM**

**குறுக்கு விசாரணை**

1. எனக்கு தமிழ் எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியாது. மனுதாரர் என்னுடைய மாமனார் என்றால் சரிதான். அவர் கேட்டுக் கொண்டதற்கிணங்க சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தை மனுதாரர் கூறி தயார் செய்ததில் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். எனக்கு எந்த சங்கதியும் நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல, சண்டை நடக்கும் போது நான் அங்கு இருந்தேன். சண்டை எந்த தேதியில் எங்கு நடந்தது என்று நான் எ னது முதல் விசாரணையில் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். யார் யாரிடம் சண்டை போட்டார்கள் என்ற விவரத்தையும் நான் சொல்லவில்லை என்றால் சரிதான்.

2. அசல் வழக்கில் என்ன தீர்ப்பு பகரப்பட்டது மற்றும் அந்த சொத்து விவரத்தை பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். மேற்படி அசல் வழக்கில் 3 முதல் 6 எதிர்மனுதாரர்கள் தரப்பினர் அல்ல என்றாலும், 1, 2 எதிர்மனுதாரர்கள் மட்டும் தான் தரப்பினர்களாக இருந்தார்கள் என்றால் சரிதான். 3 முதல் 6 எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கில் தரப்பினராக இல்லை என்பதால் இந்த மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல, சம்பவத்தின் போது அவர்களும் இருந்தார்கள். நான் கூறுவது பொய் என்றாலும், மனுதாரர் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மனுவின் 6 ம் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு எதிராக சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 94/2024 தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான்.

3. மேற்படி வழக்கை 6 ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ளதால் அவர்களை மிரட்டி பணிய வைக்க வேண்டும் என்ற காரணத்திற்காக இந்த நிறைவேற்றுமனுவை மனுதாரர் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. 3 முதல் 6 எதிர்மனுதாரர்கள் எந்த ஒரு நீதிமன்ற அவமதிப்பும் செய்யவில்லை என்றாலும் ஆகையால் தான் குறிப்பிட்டு எந்த ஒரு தேதியும் என்னால் சொல்ல முடியவில்லை என்றால் சரியல்ல, ஜேசிபி வைத்து பிரச்சனை செய்த போது புகைப்படம் எடுத்துள்ளோம்.

4. நான் கூறுவது போன்று 3 முதல் 6 எதிர்மனுதாரர்கள் எந்தவொரு பிரச்சனையும் செய்யவில்லை என்றால் சரியல்ல. ஆகவே இந்த மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிவுற்றது. மறுவிசாரணை இல்லை.**

ESHWAR VISWANATHAN

DISTRICT MUNSIF
Digitally signed by ESHWAR VISWANATHAN
Location: VANIYAMBADI
Date: 2025.12.11 15:32:21 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாணியம்பாடி.